

# ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம்

ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டமானது நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடனும், இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஐந்தாண்டு (2020-2025) கருத்திட்டமாகும். கருத்திட்டத்தின் மொத்தச் செலவு 75.03 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

## கருத்திட்டம்

- நீர் வளங்களின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தும்.
- அரச முதலீட்டுத் திட்டத்துடன் (2017-2020) இயைந்ததாக இருக்கும்.
- தேசிய கொள்கைகள் கட்டமைப்பிற்கமைவான கருத்திட்டமாகும்.
- காலநிலை மாற்றங்களால் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கும் அவை மட்டில் இயைபாக்கம் அடைவதற்கும் பங்களிப்புச் செய்யும்.
- நிலைபேறான அபிவிருத்தியின் இலக்குகளைப் பூர்த்தி செய்யும்.

## கருத்திட்டத்தின் நோக்கம்

- நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்களைத் திட்டமிடுதலை அபிவிருத்தி செய்தல் மற்றும் நீர் வளங்களுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளது செயற்பாட்டை அதிகரித்தல்.

## பிரதான கருத்திட்டத்தின் கூறுகள்

- முதலாவது கூறு – நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்களைத் திட்டமிடுதல் (13.7 மில்லியன் அமெரிக்க டொலர்.) இதன் கீழ் மேல் மகாவலி நீரேந்துப் பிரதேசங்களுக்கான முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல், நீரேந்துப் பிரதேசங்களை மறுசீரமைத்தல் மற்றும் பல்வகைமையான நீர் வளங்களைத் திட்டமிடுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் 03 உப கூறுகள் உள்ளன.
  - 1.1 நீரேந்துப் பிரதேசங்கள் முகாமைத்துவத் திட்டம் (1.0 மில்லியன் அமெரிக்க டொலர்)
  - 1.2 நீரேந்துப் பிரதேசங்களை மறுசீரமைத்தல் (5.0 மில்லியன் அமெரிக்க டொலர்)
  - 1.3 பல்வகைமையான நீர் வளங்களைத் திட்டமிடுதல் (7.7 மில்லியன் அமெரிக்க டொலர்)
- இரண்டாவது கூறு – நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (57.8 மில்லியன் அமெரிக்க டொலர்) இதன் கீழ் ஆபத்திற்குள்ளாகியுள்ள 36 குளங்களது அணைக்கட்டுக்கள் மற்றும் 19 கால்வாய் கட்டமைப்புக்கள் மறுசீரமைக்கப்படும்.

Ministry of Irrigation

IWWRMP


THE WORLD BANK

වාරි සෞභාග්‍යා
நீர்ப்பாசன செழுமை

## கருத்திட்டத்தின் பிரதான கூறு தொடர்பான தகவல்கள்

| கூறு | கூறின் பிரதான நோக்கங்கள் | பிரதான தரப்பு நிறுவனம் |
|---|---|---|
| முதலாவது கூறு | மேல் மகாவலி நீரேந்துப் பிரதேசங்களது திட்டமிடலுக்கும் மீளத்தாபிப்பதற்கும் உதவுதல்.<br><br>நிலத்தடி நீர் முகாமைத்துவம், தன்னியக்க காலநிலை அளவு தகவல் கட்டமைப்பொன்றைத் தாபித்தல் மற்றும் நீர் வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிறுவனங்களை வலுப்படுத்தல். | இலங்கை மகாவலி அதிகாரசபை, ஹதபிம அதிகாரசபை, இயற்கை வளங்கள் முகாமைத்துவ மத்திய நிலையம், வனப்பாதுகாப்பு திணைக்களம், காணி பயன்பாடுகள் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்டச் செயலகங்கள் (கண்டி, நுவரேலியா மற்றும் பதுளை), சிறு தேயிலை அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் (மத்திய மற்றும் ஊவா) மாகாண கமநல சேவைகள் திணைக்களம் (மத்திய மற்றும் ஊவா), மாகாண விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதாரத் திணைக்களம் (மத்திய மற்றும் ஊவா), இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், நீர் வளங்கள் சபை. |
| இரண்டாவது கூறு | நீருடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளின் வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் நீடித்த தன்மையை மேம்படுத்துதல் மற்றும் உரிய முகாமைத்துவம் மற்றும் சிறந்த பரிசோதனைகளை உறுதிப்படுத்துவதற்காக நிறுவன ரீதியான ஏற்பாடுகளுக்கு உதவுதல். | இலங்கை மகாவலி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம். |

- முதலாவது கூறிற்குரிய நிகழ்ச்சித்திட்டத்திற்குள் மேல் மகாவலி நீரேந்துப் பிரதேசத்தை உள்ளடக்கியதாக கண்டி, நுவரேலியா மற்றும் பதுளை மாவட்டங்களுக்குரிய 31 பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இரண்டாவது கூறிற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையில் 7 மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.




### பிரேரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

## முதலாவது கூறு

- பயிர்ச்செய்கை நிலங்களிலும் அதற்குப் புறம்பாகவும் மண் மற்றும் நீர் பாதுகாப்பு, மீள் வன வளர்ப்பு, ஆற்றங்கரைகளது பாதுகாப்பு, தூர்ந்துபோன சிறிய குளங்களை புனரமைத்தல், வீட்டுத் தோட்டங்களது அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி.

- நிலத்தடி நீர் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தன்னியக்க காலநிலை அளவு கட்டமைப்பு தாபிக்கப்படும்.

## இரண்டாவது கூறு

- ஆபத்தான நிலைமைகளில் உள்ள நீர்த்தேக்கங்களது அணைக்கட்டுக்கள் சார்ந்த கட்டமைப்புசார் மற்றும் நீர்ப்பாசன கால்வாய்கள் மற்றும் அதனை ஒட்டிய கட்டமைப்புக்களை புனரமைத்தல்.

கருத்திட்டப் பணிப்பாளர்
ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம்
இரண்டாம் மாடி, மகாவலி மத்திய நிலையம்,
இலக்கம் 96, ஆனந்தா குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு 07.

தொலைபேசி இலக்கம்: 0112691163
மின்னஞ்சல் முகவரி: iwwrmp@sltnet.lk